**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**

முன்னிலை: திரு.G.பாண்டியராஜன், B.Com.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

(2056 திருவள்ளுவராண்டு ஸ்ரீவிசுவாவசு வருடம் கார்த்திகை திங்கள் 26ம் நாள்)
2025ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12ம் நாள் வெள்ளிக்கிழமை

**E.P.No.3/2021**
**CNR No.TNED13-000296-2021**
**In**
**O.S.No.29/2014**

1. சுப்பணன்
2. பர்வதம்
3. தண்டபாணி
4. பாஸ்கரன் – மனுதாரர்கள்/வாதிகள்

//எதிராக//

1. கொமரப்ப கவுண்டர் (இறந்தவர்)
2. மாலதிதேவி
3. சுகேஷ்
4. தமிழக அரசுக்காக அதன் மாவட்ட ஆட்சியர், ஈரோடு.
5. மாவட்ட வருவாய் கோட்டாட்சியர், ஈரோடு மாவட்டம்.
6. வருவாய் கோட்டாட்சியர், பிரப் ரோடு, ஈரோடு.
7. வட்டாட்சியர் முன்பு ஈரோடு வட்டம், தற்போது
   கொடுமுடி வட்டம், கொடுமுடி.
8. சண்முகம்
9. மோகன்
10. வாசு
11. பொன்னுசாமி
12. மாலதி
13. மதியழகன் – எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

Digitally signed by PANDIARAJAN
Date: 2025.12.12 17:30:49 +0530
PANDIARAJAN

இம்மனு இந்நீதிமன்றத்தில் 25.11.2025ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபொழுது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.சி.முத்துசாமி அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.செந்தில்குமார் அவர்கள் ஆஜரானபொழுதும் 3ம் எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜராகாததால் 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், மனுதாரர்கள் தரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவு

அசல் வழக்கு எண்.29/2014 வழக்கின் தீர்ப்பாணையின்படி டிகிரியின் 7வது ஷரத்தின்படி 1ம் எதிர்மனுதாரர் தாவா F அட்டவணை சொத்தில் 4,5 இனச் சொத்துக்களான பாதை மற்றும் வண்டிப்பாதையை நீதிமன்றத்தில் நிர்ணயித்த காலக்கெடுவுக்குள் நிறேவேற்ற தவறி இறந்துவிட்டதால் 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் சொத்தினை அடைந்துள்ள 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பி 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதியிடம் நீதிமன்ற உத்தரவுப்படி பாதையை மீட்டமைப்பு செய்து கொடுக்க கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 21 விதி 11(2)ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்;–**

மனுதாரர்கள்/வாதிகள், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கு எண்.29/2014 என்ற வழக்கை தாக்கல் செய்து மேற்படி வழக்கில் 31.10.2017ம் தேதி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு மேற்படி தீர்ப்பாணையில் 7வது ஷரத்தில் 1ம் பிரதிவாதி தாவா F அட்டவணை சொத்தில் 4,5 இன சொத்துக்களான பாதை மற்றும் வண்டிப்பாதையை இருந்த நிலைக்கே 3 மாத காலத்திற்குள் அமைத்துக் கொடுக்க வேண்டுமென செயலுறுத்துக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஏ.எஸ்.நெ.4/2018 என்ற வழக்கை தாக்கல் செய்யப்பட்டு அப்பீல் வாதிகள் ஆஜராகாததால் 29.03.2019ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டதாகவும் கூறியுள்ளார்கள். ஆகவே தீர்ப்பாணையின் 7வது ஷரத்தின்படி 1ம்


PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2025.12.12 17:31:05 +0530

எதிர்மனுதாரர் தாவா F அட்டவணை சொத்தில் 4,5 இனச் சொத்துக்களான பாதை மற்றும் வண்டிப்பாதையை நீதிமன்றத்தில் நிர்ணயித்த காலக்கெடுவுக்குள் நிறைவேற்ற தவறி இறந்துவிட்டதால் 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் சொத்தினை அடைந்துள்ள 3ம் எதிர்மனுதார்/3ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பி 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி நீதிமன்ற உத்தரவுப்படி பாதையை மீட்டமைப்பு செய்து கொடுக்க தவறினால் நீதிமன்ற தீர்ப்பாணைப்படி நீதிமன்ற அலுவலர் மூலமாக பாதையை மீட்டமைத்து தர உத்தரவு பிறப்பிக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் அவர்கள் ஆஜரானபொழுதும், 3ம் எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜராகாததால் 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

3. இம்மனுவில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

4. மனுதாரர்கள்/வாதிகள் அசல் வழக்கு எண்.29/2014 வழக்கு தாக்கல் செய்து வழக்கில் 31.10.2017ம் தேதி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை மனுவுடன் தாக்கல் செய்துள்ள தீர்ப்பாணையின் சான்று நகல் மூலம் அறிய முடிகிறது. மேற்படி தீர்ப்பாணையில் 7வது ஷரத்தில் 1ம் பிரதிவாதி தாவா F அட்டவணை சொத்தில் 4,5 இன சொத்துக்களான பாதை மற்றும் வண்டிப்பாதையை இருந்த நிலைக்கே 3 மாத காலத்திற்குள் அமைத்துக் கொடுக்க வேண்டுமென செயலுறுத்துக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் பேரில் 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி மேல்முறையீடு தாக்கல் செய்து இவ்வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை நிறுத்தி வைக்க தடை ஆணை பெற்றுள்ளதாக 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி வழக்கில் ஆஜராகி அவரது தரப்பு வழக்கை நிரூபிக்கவில்லை. மனுதாரர்கள் மனுவை பரிசீலனை செய்து பார்க்கும்போது தீர்ப்பாணையின் 7வது ஷரத்தின்படி 1ம் எதிர்மனுதாரர் தாவா F அட்டவணை சொத்தில் 4,5 இனச் சொத்துக்களான பாதை மற்றும் வண்டிப்பாதையை நீதிமன்றத்தில் நிர்ணயித்த


PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2025.12.12 17:31:16 +0530

காலக்கெடுவுக்குள் நிறேவேற்ற தவறி இறந்துவிட்டதால் 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் சொத்தினை அடைந்துள்ள 3ம் எதிர்மனுதார்/3ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பி 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி நீதிமன்ற உத்தரவுப்படி பாதையை மீட்டமைப்பு செய்து கொடுக்க தவறினால் நீதிமன்ற தீர்ப்பாணைப்படி நீதிமன்ற அலுவலர் மூலமாக பாதையை மீட்டமைத்து தர உத்தரவு பிறப்பிக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டவுடன் அதை நிறைவேற்றுவது நீதிமன்றத்தின் கடமை ஆகும். மேலும் தடை உத்தரவு ஏதும் இல்லாததாலும் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்கலாம் என தீர்மானித்து இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவாக.** மனுதாரர்கள் மனு செலவு தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2025ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN Date: 2025.12.12 17:31:27 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

மனுதாரர்கள், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள், சான்றாணவங்கள் – இல்லை –

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN Date: 2025.12.12 17:31:35 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.